<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 27/2015 C/W OS.NO.122/2015 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | கார்த்திகேயன் | நாள் | 24.04.2024 |
| தகப்பனார் பெயர் | சண்முகம் | | |

<u>**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:–**</u>

1) ஓமலூர் சேலம் நீதிமன்றத்தில் நான் 1996ம் வருடத்திலிருந்து வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். ஓமலூரில் எனது வழக்கறிஞர் அலுவலகம் உள்ளது. தற்போது ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராக உள்ளேன்.

2) என் முதல் விசாரணை சாட்சியத்தில் வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தை நான் தான் தயாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி உயில் ஆவணம் எவ்வளவு பக்கம் கொண்டது, என்ன மதிப்புடைய முத்திரைத்தாளில் பதிவு செய்யப்பட்டது என்று என்னால் கூற இயலுமா என்றால், ஆவணத்தை பார்த்தால் கூற இயலும்.

3) மேற்படி உயில் ஆவணத்தை நான் தயாரித்ததாக சொல்லியுள்ளேன் என்றால், தரப்பினர் கூறியதன் அடிப்படையில் நான் தயாரித்தேன். மேற்படி உயில் ஆவணத்தை என் அலுவலகத்தில் வைத்து தயாரித்தேன். மேற்படி உயில் ஆவணம் என்னுடைய அலுவலகத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டதா என்றால், பத்திரபதிவு அலுவலகத்திற்கு அருகில் உள்ள தட்டச்சு அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது.

4) மேற்படி உயில் ஆவணத்தை யார் தட்டச்சு செய்தது என தட்டச்சு செய்தவரின் கையெழுத்து எதுவும் இல்லை என்றால், சரிதான். மேற்படி உயிலில் கண்டுள்ள என்னுடைய கையெழுத்திற்கு மேலே Attested என்றுதான் உள்ளதே தவிர Drafted by me என வாசகம் எதுவும் இல்லை என்றால், சரிதான்.

5) மேற்படி உயில் ஆவணத்தின் நகல் ஏதேனும் என் அலுவலகத்தில் உள்ளதா என்றால், இல்லை. எனக்கு இவ்வழக்கில் அழைப்பாணை அனுப்பப்பட்ட பின்பு மேற்படி உயிலின் நகல் எதையேனும் பெற்று, பரிசீலித்தேனா என்றால், இல்லை.

நீதிமன்றத்திற்கு வந்த பின்னிட்டுதான் மேற்படி ஆவணத்தை நான் பார்த்தேன். என் முதல் விசாரணை சாட்சியத்தில் மேற்படி சண்முகம் என்பவர் எனக்கு வேறு ஒரு நபர் மூலம் எனக்கு அறிமுகம் என நான் சொல்லும் நிலையில், மேற்படி அந்த நபர் தீவட்டிப்பட்டியை சேர்ந்த தன்ராஜ் என்றால், அவர் பெயர் தற்போது எனக்கு சரியாக நினைவில்லை. ஆனால் அவர் நைனாக்காடு பகுதியை சேர்ந்தவர். மேற்படி நபர் சண்முகத்தின் உறவினர் ஆவார்.

5) மேற்படி உயில் ஆவணத்திற்கான முத்திரைத்தாள் யார் பெயரில் பெறப்பட்டது என்றால், சண்முகம் என்பவர் பெயரில் பெறப்பட்டது. மேற்படி பத்திரம் எந்த ஊரில் வாங்கப்பட்டது என்றால், ஓமலூரில் வாங்கப்பட்டது. எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால், தேதி சரியாக நினைவில்லை.

6) மேற்படி உயில் ஆவணம் தயாரித்து பதிவு செய்யப்பட்ட தேதியில் சண்முகத்துடன் அவரது மனைவி, மகன்களான சந்திரசேகர் மற்றும் குணசேகர், மகள் பெருமாயி, அவரது கணவர் தன்ராஜ் ஆகியோர் வந்திருந்தனர் என்றால், அது குறித்து எனக்கு சரியாக நினைவில்லை. ஆனால், சுமார் 3, 4 நபர்கள் சண்முகத்துடன் வந்திருந்தனர்.

7) மேற்படி உயில் ஆவணத்தில் சண்முகத்திற்கு உடல்நிலை சரியில்லை என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அவரது உடல்நிலை சம்மந்தமாக எனக்க நேரடியாக எதுவும் தெரியாது என்றால், சரிதான். அவருடைய உடல்நிலை மற்றும் மனநிலை தொடர்பாக ஏதேனும் மருத்துவ சான்றிதழ் பெற்றுவந்திருந்தாரா என்றால், இல்லை. அவரே நேரடியாக வந்ததால் அவ்வாறு சான்றிதழ் எதையும் நான் பரிசீலிக்கவில்லை.

8) மேற்படி உயில் ஆவணம் பதிவுசெய்யப்பட்ட சமயத்தில் மேற்படி சண்முகம் படுத்தப்படுக்கையாக இருந்தார் என்றால், என் அலுவலகத்திற்கு அவர் வரும் பொழுது, வயோதிகம் காரணமாக அவரால் சரியாக நடக்க முடியவில்லை அவரை அழைத்து வந்தனர். எத்தனை மணிக்கு என் அலுவலகம் வந்தார்கள் என்றால் சுமார் காலை 11.30 மணி இருக்கும்.

9) மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள வாசகங்களை மேற்படி தீவட்டிப்பட்டியை சேர்ந்த தன்ராஜ் என்பவர் சொல்லி நான் தயாரித்தேன் என்றால், இல்லை. சண்முகம் தான்

சொன்னார். மேற்படி வா.சா.ஆ.1 ல் தமிழ் வருடம், தமிழ் மாதம் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியாக நினைவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தின் முதல் பக்கத்தில் 4–வது விரியில் பெரியண்ணன் என்ற பெயரில் முதல் இரண்டு எழுத்துக்கள் பிழைத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதில் சுருக்கொப்பம் எதுவும் செய்யப்படவில்லை என்றால், சரிதான். மேற்படி ஆவணத்தில் முதல் பக்கத்தில் இறுதியில் திருத்தம் என எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான்.

10) அவ்வாறு திருத்தம் செய்யப்பட்டிருந்தால் அந்த பக்கத்தில் இறுதியில் அவ்வாறு திருத்தம் குறித்து குறிப்பிடப்படவேண்டும் என்றால், சரிதான். மேற்படி ஆவணத்தில் சொத்து விவரம் எவ்வாறு தயாரிக்கப்பட்டது என்றால், சண்முகத்தின் பெயரிலுள்ள பட்டா மற்றும் மூல ஆவணங்கள், மற்றும் வரைபடம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, அதனடிப்படையில் தயாரிக்கப்பட்டது. அவ்வாறு பட்டா, மூல ஆவணங்களை பரிசீலித்து அதனடிப்படையில் மேற்படி உயில் எழுதப்படுவதாக குறிப்பாக அதில் எந்த வாசகமும் இல்லை என்றால், சரிதான். ஆனால், பட்டாப்படி பாத்தியப்பட்டது என வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

11) சொத்து விவரத்தில் கண்டுள்ள சொத்து எந்த கிராமத்தை சேர்ந்தது என்றால், மேச்சேரி கிராமத்தை சேர்ந்தது. மேற்படி சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் குறித்து தெரியுமா என்றால், தற்போது எனக்கு நினைவில்லை. நீதிமன்றத்தில் மேற்படி உயில் ஆவணத்தை பார்த்த பின்பும், எனக்கு மேற்படி சர்வே எண் குறித்து நினைவில்லையா என்றால், 16 வருடங்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால், அது குறித்து எனக்கு நினைவில்லை.

12) மேச்சேரி கிராமத்திலுள்ள சொத்தை எதனால், ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்பதற்கு ஏதேனும் காரணம் மேற்படி உயில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. மேற்படி சண்முகம் என்பவர் கையெழுத்து போடுவாரா என்பதை நான் தெரிந்துகொண்டேனா என்றால், கேட்டபோது வயது மூப்பு காரணமாக கையெழுத்து சரியாக வராது என்பதால், கைரேகை வைப்பதாக கூறினார். அவ்வாறு மேற்படி நான் சொல்வது போல் குறிப்பாக எந்த வாசகமும் உயில்

ஆவணத்தில் இல்லை என்றால், சரிதான். மேற்படி சண்முகத்தின் வயது குறித்த எந்த ஆவணமும் மேற்படி உயிலுடன் இணைக்கப்படவில்லை என்றால், சரிதான்.

13) Attested என்றால், என் முன்பாக கையெழுத்து செய்யப்பட்டது என்றுதான் பொருள் என்றால், சரிதான். ஆனால், என் முதல் விசாரணை சாட்சியத்தில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று, சார்பதிவாளர் அதை தெளிவுப்படுத்திய பின்புதான் அவர்கள் உயில் ஆவணத்தில் கையெழுத்திட்டனர் என நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். ஆவணப்பதிவு நடைமுறையில் சார்பதிவாளர் முன்பு தரப்பினர் ஆஜராகி ஆவணம் குறித்து தரப்பினருக்கு விளக்கப்பட்டு, அதற்கு பின்னிட்டு அவர்கள் சார்பதிவாளர் முன்னால் கையெழுத்திட்டதால், நான் அவ்வாறு கூறியுள்ளேன்.

14) வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் சண்முகத்தின் தந்தை பெயர் குறித்து, எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் அதில் கண்டுள்ள சரத்துக்கள் என்னால் சொல்லப்பட்டு, எனக்கு படித்து காண்பிக்கப்பட்டு, சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டதாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். ஆனால், 5–ம் பக்கத்தில் படிக்க கேட்டேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

15) மேற்படி உயிலில் என்னால் படித்து காண்பிக்கப்பட்டது என்ற வாசகம் இல்லை என்றால், குறிப்பாக வாசகம் இல்லை. நான் படித்து காண்பித்துதான் அவர் கைரேகை வைத்தார். பொதுவாக ஒரு நபர் மனநலம் பாதிக்கப்பட்டிருந்தால், அவர் எந்த ஆவணமும் எழுத முடியாது என்றால், சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் பக்கம் 3 ல் பெரியாக்கவுண்டர் என குறிப்பிடப்பட்டுள்ள நபர் மனநலம் சரியில்லாதவர் என வழக்கில் சொல்லப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

16) மேற்படி பெரியாக்கவுண்டர் என்பவர் சண்முகத்தின் முதல் மனைவியின் மகன் கோவிந்தராஜ் என்பவர் இறந்ததிலிருந்து, மனநலம் பாதிக்கப்பட்டு இருந்து வருவதாக வழக்குரையில் சொல்லியுள்ளனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மனநலம் பாதிக்கப்பட்ட நபரின் பெயரில் ஒரு உயில் ஆவணம் ஏற்படுத்தப்பட்டிருந்தால், அந்த ஆவணம் செல்லாது என்றால், சரியல்ல.

17) மேற்படி உயில் ஆவணம் நான் தயாரித்தல்ல என்றாலும், மேற்படி உயில்

ஆவணத்தில் கண்டுள்ள வாசகங்கள் சண்முகத்தால், சொல்லப்பட்டவை அல்ல என்றாலும், மேற்படி சண்முகம் உடல்நலம் பாதிக்கப்பட்டு பேசமுடியாமல், படுத்தப்படுக்கையாக இருந்துள்ளார் என்றாலும், ஏற்கனவே சண்முகத்தின் மருமகன் தன்ராஜ் என்பவர் சொல்லி தயாரிக்கப்பட்ட உயில் பத்திரத்தை நான் என் செல்வாக்கை பயன்படுத்தி பதிவு செய்துவிட்டேன் என்றால், சரியல்ல. மேற்படி ஆவணம் மோசடியானது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் செல்லக்கூடியது அல்ல என்றால், சரியல்ல. பிரதிவாதிகளை மேற்படி ஆவணம் கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல.

18) மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையெழுத்திட்டுள்ள முதல் நபர் எந்த ஊரை சேர்ந்த நபர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், மாட்டுக்காரன் புதூர், என குறிப்பிடப்பட்டுள்ளது. அது பன்னப்பட்டி கிராமம் என்றால், சரிதான். 2 வது நபர் தீவட்டிப்பட்டியை சேர்ந்த தன்ராஜ் என்றால், சரிதான். மேற்படி இரண்டு நபர்களும் தாவா சொத்து அமைந்துள்ள ஊரை சேர்ந்தவர்கள் அல்ல என்றால், சரிதான். மேற்படி இருவரும் சண்முகத்தின் உறவினர்கள் என்றால், தன்ராஜ் மட்டும் அவரது மருமகன் ஆவார்.

19) மேற்படி உயில் ஆவணத்தில் தேதி 01.09.2008 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 இறப்பு சான்றிதழில் சண்முகம் 12.09.2008 ம் தேதியில் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி சண்முகத்திற்கு உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு அவருக்கு சரியான சுயநினைவு இல்லாத நிலையில், மேற்படி உயில் ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. மேற்படி உயில் ஆவணம் மோசடியாக என்னால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.